


**10. 05. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டின் முதலமைச்சராக திரு.ஜோசப் விஜய் இன்று பதவி ஏற்றார்.

மகளிர் பாதுகாப்பு, போதை பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

2. தமிழக முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் திரு.நரேந்திரமோடி மாநில அரசுக்கு, மத்திய அரசு துணை நிற்கும் என்று கூறினார்.

3. தமிழகத்தின் வளர்ச்சி பாதை தொடர திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக முதலமைச்சராக த.வெ.க.வின் திரு. ஜோசப் விஜய் இன்று பதிவியேற்றார்.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் இன்று நடைபெற்ற விழாவில் ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், திரு. விஜய்க்கு முதலமைச்சராக பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

திரு. விஜய்யுடன்,

திரு. கே. ஏ. செங்கோட்டையன்,

திரு. என். ஆனந்த்,

திரு. ஆதவ் அர்ஜுனா,

டாக்டர் கே.ஜி. அருண்ராஜ்,

திரு. பி. வெங்கடரமணன்,

திரு. ஆர். நிர்மல்குமார்,

திரு. ராஜ்மோகன்,

டாக்டர் டி.கே. பிரபு,

செல்வி கீர்த்தனா ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இதனைத் தொடர்ந்து விழா மேடையில் இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படுவதற்கான ஆணையில் அவர் கையெழுத்திட்டார்.

தொடர்ந்து மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சிங்கப்பெண்கள் சிறப்பு அதிரடிப்படை அமைப்பதற்கும்,

போதைப் பொருள் தடுப்பு படை அலகுகள் உருவாக்குவதற்கான ஆணைகளில் முதலமைச்சர் கையெழுத்திட்டார்.

இதனைத் தொடர்ந்து விழாவில் பேசியஅவர், தமிழக அரசின் தற்போதைய நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் மகளிர் பாதுகாப்பு போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறிய அவர், தேர்தல் வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்றார்.

அரசு அமைப்பதற்கு ஆதரவளித்த காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர்களுக்கு, முதலமைச்சர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் திரு. ராகுல் காந்தி, திரு. செல்வப் பெருந்தகை,

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித்தலைவர்கள்,

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், டாக்டர் தமிழிசை செந்தர்ராஜன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பங்கேற்றனர்.

தலைமைச்செயலகம் சென்று தமது பணியை தொடங்கிய திரு. விஜய்க்கு பல்வேறு துறைகளின் தலைவர்கள் வாழ்த்து தொிவித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சபாநாயகர்

தமிழக சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக சோழவந்தான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கருப்பையா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவில் முதலமைச்சர் கையெழுத்திட்டார்.

புதிய சட்டப்பேரவை உறுப்பினர்களின் பதவியேற்பு நாளை நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து நாளை மறுநாள் சட்டப்பேரவை தலைவர் மற்றும் துணைத்தலைவருக்கான தேர்தல் நடைபெறுகிறது.

திரு. ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு, சட்டப் பேரவையில் தனது பெரும்பான்மையை வரும் புதன் கிழமைக்குள் நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தலைவர்கள் வாழ்த்து

இதனிடையே முதலமைச்சரின் தனி செயலர்களாக திரு.செந்தில்குமார், திருமதி லெட்சுமி பிரியா ஆகியோரை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

முதலமைச்சராக இன்று பொறுப்பேற்ற திரு. விஜய்க்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி, வாழ்த்து தொிவித்துள்ளார்

பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் தமிழக மக்களின் நலனிற்காக மத்திய அரசு, மாநில அரசுடன் இணைந்து செயலாற்றும் என்று கூறினார்.

புதிய முதலமைச்சருக்கு வாழ்த்து தொிவித்துள்ள தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டின் வளர்ச்சி பயணம் தொடர வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. விஜய்யின், முதல் மூன்று அறிவிப்புகளை வரவேற்பதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணமில்லை என்று கூறாமல், ஆட்சித் திறனுடன் மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அனுமதிக்கப்பட்ட வரம்பிற்கு உட்பட்டே தமிழகத்தின் கடன் அளவு இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள திரு. ஸ்டாலின்,

கடந்த 5 ஆண்டுகளாக கோவிட் பெருந்தொற்று சூழல், மழை வெள்ள பாதிப்புகள், நிதி பற்றாக் குறையின் மத்தியிலும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தமது அரசு நிறைவேற்றியதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவு உள்ளதை மேற்குவங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தேர்தல் வெற்றி எடுத்துக்காட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொிவித்துள்ளார்.

பெங்களூருவில் பி.ஜே.பி. தொண்டர்களிடையே உரையாற்றிய அவர், நாட்டை முன்னேற்றப்பாதையில் வழிநடத்திச் செல்ல சிறந்த நிர்வாகத்துடன் கூடிய அரசின் அவசியத்தை வலியுறுத்தினார்.

பெங்களூருவில் வாழும் கலை அமைப்பின் 45-ம் ஆண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்ற பிரதமர், இந்த அமைப்பின் புதிய தியான கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

இன்று பிற்பகல் ஹைதராபாத் சென்றடையும் பிரதமர், அங்கு 9 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

மேலும் புற்றுநோய் சிகிச்சையில் நவீன நுட்பங்களை கையாளும் சிந்து பல்துறை உயர் சிறப்பு மருத்துவமனையை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாடுமுழுவதும் வெப்பஅலை மற்றும் மழை வெள்ளத்தை எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்து உயர்நிலை ஆய்வுக்கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இயற்கை பேரிடர்கள் குறித்த முன்னறிவிப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள், உயிரிழப்புகளை தடுத்தல், உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியா - ட்ரினிடாட் & டொபாக்கோ இடையே இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தொ◌ிவித்துள்ளார்.

அங்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள அவர் அந்நாட்டு பிரதமர் கம்லா பிரசாத் பிசெஸார் உடன் இணைந்து வேளாண் துறை சார்ந்த திட்டங்களை தொடங்கி வைத்த அவர், நிரந்தர செயற்கை உறுப்பு பொருத்தும் மையத்தையும் திரு. ஜெய்சங்கர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கோடை முகாம்

கோடை விடுமுறையின் போது நாடுமுழுவதும் உள்ள பள்ளிகளில் பாரதிய பாஷா கோடை முகாம் 2026-ஐ நடத்த கல்வி அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

இந்த ஒருவார கால முகாமில் சுய அறிமுகம், சொல் அகராதி உருவாக்கம், கலாச்சாரத்தை போற்றுதல், தகவல் தொடர்பு கலந்துரையாடல் உள்ளிட்ட திறன்களை மேம்படுத்த பயிற்சிகள் வழங்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருச்சி மாவட்டத்தில் பார்வை திறன் குறைபாடுடைய மாணாக்கர் விடுதியுடன் கூடிய அரசு சிறப்பு பள்ளியில் சேர்க்கை நடைபெறுவதாக ஆட்சித் தலைவர் திரு. சரவணன் தொ◌ிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தட்டைப்பயிறு வாய்ஸ்

தட்டைப்பயிறு சாகுபடியில் தொழில்நட்ப பயன்பாடுகளின் மூலம் அதிக மகசூல் பெறலாம் என வேளாண்துறை விளக்கம் அளித்துள்ளதாக எமது மதுரை செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல் வாய்ஸ்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கோடை விடுமுறையை ஒட்டி சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளதால் அங்கு போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

குறைதீர்நாள் கூட்டம் வாய்ஸ்

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து திருச்சி, அரியலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மக்கள் குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறும் என அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

திருப்பத்தூரில் மக்கள் குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், மதுரை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொ◌ிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

ஶ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில் சித்திரை தேரோட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று மாலை மூன்றரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் – லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெறும் முனைப்பில் சென்னை சூப்பர் கிங்ஸ் இன்று களமிறங்குகிறது.

ராய்பூரில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் மற்றொரு போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – மும்பை இண்டியன்ஸுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வில்வித்தை

ஷாங்காயில் நடைபெற்ற உலக கோப்பை வில்வித்தை 2-ம் கட்ட போட்டியில் தீபிகா குமாரி அங்கிதா பஹத், கும்கும் மோஹத் ஆகியோர் அடங்கிய இந்தியா அணி தங்கப்பதக்கத்தை கைப்பற்றி உள்ளது.

இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா - சீனாவை 5-4 என்ற கணக்கில் வென்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

சீனாவில் நடைபெறும் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று இரவு உஸ்பெகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖